308

# போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்




OFFICE OF THE ... MADRAS
15 AUG 1942
308

Editor & Publisher: ... Lourduswami, B.A., L.T.
R.C. ... Training School, Trichinopoly.

JL
N42.33.2
182299

கோ... ஆகஸ்டு 1942 மலர் 2

R. ... பயிற்சி பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 1½.

# போதனா விஷய பூங்கொத்து

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பத்திராதிபர் குறிப்புகள் | 25 |
| 2. | சென்னை கல்வி இலாகா | 26 |
| 3. | சுயமாய்ப் படித்தல் | 27 |
| 4. | அணியியல் | 30 |
| 5. | ஒரு சிறிய நாட்டுப்பாடல் | 31 |
| 6. | பாடக் குறிப்பு | 32 |
| 7. | பள்ளிக்கூடங்களில் தேகப்பயிற்சி | 34 |
| 8. | பூகோளம் போதிப்பதெப்படி? | 36 |
| 9. | சிறு கதை | 39 |
| 10. | தாவர நூல் | 40 |
| 11. | யோசனைக்கணக்கு விடைகள் | 4 |
| 12. | கிளைவும் பாளையக்காரனும் | 4 |
| 13. | விடுகதை விடைகள் | 45 |
| 14. | நம் பாடசாலை நிகழ்ச்சிகள் | 46 |
| 15. | யோசனைக் கணக்கு | 47 |
| 16. | பாலர் ஸங்கீதம் | 48 |


---


## Rates of Advertisement

| Period | Half Page | | | Full Page | | |
|---|---|---|---|---|---|---|
| | Rs. | As. | Ps. | Rs. | As. | Ps. |
| 1 Month ... ... | 4 | 0 | 0 | 7 | 8 | 0 |
| 3 Months ... ... | 11 | 0 | 0 | 20 | 0 | 0 |
| 6 Months ... ... | 20 | 0 | 0 | 35 | 0 | 0 |
| 1 Year (11 Issues) ... | 30 | 0 | 0 | 55 | 0 | 0 |


Imprimatur : ✠ JAMES, *Bishop of Trichinopoly.*



OFFICE ... 15 AUG 1942 MADRAS

# போதனை விஷயப் பூங்கொத்து

கோத்து 33] 15 ஆகஸ்டு 1942 [மலர் 2

## பத்திராதிபர் குறிப்புகள்

**பூங்கோத்தின் புதுத்தோற்றம்** :—நமது "பூங்கொத்தின்" இவ்வாண்டு புது மலரின் வெளித்தோற்றம், முந்திய மலர்களைப்போலன்றிப் புதுவிதமாக இலங்கியிருப்பதை நம் நேயர்கள் கண்ணுற்றிருப்பார்கள். இவ்வண்ணமே இனிமேலும் தோன்றும். இத்தோற்றத்தைப்பற்றிப் பலர் புகழுரை புரிந்துள்ளார்கள். அவர்களுக்கு எமது மகிழ்ச்சி உரித்தாகும்.

அன்றியும் நம் "பூங்கொத்துக்கு" விஷயதானம் சிலர் செய்துவருகின்றனர். இதனை மெச்சுகிறோம். அவ்வாறு இன்னும் பலரும் பயனுள்ளதும் அவசியமானதுமான விஷயங்களைப் பற்றி விஷயதானம் புரிந்து வருவார்களானால், தங்களுக்கும் ஏனையோர்க்கும் எவ்வளவு பிரயோஜனமாய் இருக்குமென்பதைக் கூறவும் வேண்டுமோ!

நமது பத்திரிகை இந்த நெருக்கடியான இக்காலத்தில்கூட பல புதிய சந்தாதார்களை மாதந்தோறும் பெற்று வருவது மிகவும் மெச்சத்தக்கதே! இவ்வாறே நம பூங்கொத்து மென்மேலும் அபிவிருத்தியடைய இறைவன் அருள் புரிவாராக!

---

## சென்னை கல்வி இலாகா

## T. S. L. C. பரீட்சை கட்டண விகிதங்கள்

சென்னை கல்வி இலாகா R. C. No. 599—C/41- dated 18th July 1942 உத்திரவின்படி ஸெக்கண்டரி கிரேடு, எலிமெண்டரி (ஹையர்) கிரேடு ஆகிய இவ்விரண்டு கிரேடுகளுக்கும் 1943-ம் வருஷத்திலும், அதற்கு அடுத்துவரும் வருஷங்களிலும் T. S. L. C. பரீட்சைக்குக் கட்டவேண்டிய கட்டண விகிதம் பின்வருமாறு :—

ஸெக்கண்டரி கிரேடு எல்லாப் பாடங்களுக்கும் (முழுதும்) ரூ. 10-0-0
எலிமெண்டரி கிரேடு எல்லாப் பாடங்களுக்கும் (முழுதும்) ரூ. 6-0-0

தவறிப்போன பாடங்களில் மறுபடி அடுத்துவரும் வருஷங்களில் எழுதுவதற்கு :—

ஸெக்கண்டரி கிரேடு : ஒரு பாடம் அல்லது ஒரு குருப்பில் (Group) சேர்ந்த பாடங்களுக்கு ... ரூ. 5-0-0

எலிமெண்டரி கிரேடு : ஒரு பாடம் அல்லது ஒரு குருப்பில் (Group) சேர்ந்த பாடங்களுக்கு ... ரூ. 3-0-0

குறிப்பு :—ஒரு பாடம் அல்லது ஒரு குருப்புக்குமேற்பட்ட பாடங்களில் தவறிப்போனவர்கள் ஸெக்கண்டரி கிரேடாய் இருந்தால் ரூ. 10-ம், எலிமெண்டரி கிரேடாய் இருந்தால் ரூ. 6-ம் கட்டணம் செலுத்தவேண்டும்.

# NEW SCHEME

## The different groups of Subjects.

**SECONDARY**

| | |
|---|---|
| A GROUP ... ... | Education I<br>Education II |
| B GROUP ... ... | English-Methods & Texts |
| C GROUP ... ... | Special Methods-(Mathematics and General Science)—I<br>Special Methods-(History and Geography)—II |
| D GROUP ... ... | Tamil-Texts and Methods. |

**ELEMENTARY**

| | |
|---|---|
| A GROUP ... ... | Child Nature and Education<br>School Administration |
| B GROUP ... ... | Tamil-Methods and Texts |
| C GROUP ... ... | Methods of Teaching—<br>i. Mathematics<br>ii. Nature Study & Gardening |
| D GROUP ... ... | Methods of Teaching—<br>i. Indian History & Civics<br>ii. Geography<br>Rural Social Problems. |

18299

## சுயமாய்ப் படித்தல்

நமது பாடசாலைக் கல்விமுறையில், பாட புத்தக (Text-book) முறையே பெரிதும் போற்றப்பட்டுவருகிறது. அதிலும் பாஷை பாடத்தில் பாடபுத்தகமுறை விசேஷமாய் விளங்குகின்றது. மாணவர்கள் பரீட்சைகளில் தேறுவதுதான் முக்கியம் என்ற லக்ஷியம் இருக்கையில், பாடபுத்தகம் இன்றியமையாததோர் சாதனமே. ஆயினும், கல்வியறிவு ஏற்படவேண்டியது பரீட்சைக்கு மாத்திரமல்ல என்ற உண்மையை நாம் மறுக்க மாட்டோமல்லவா ?

பாடபுத்தகத்துக்குப் புறம்பேயுள்ள, ஏனைய இலக்கியங்களையும், பத்திரிகைகளையும் படிப்போரும்கூட பாடபுத்தகத்தைப் படிப்பதுபோல் அவ்வளவு சிரத்தையுடன் படிப்பதில்லை :— ஏதோ மேலெழுந்தாற்போல் படிப்பார்கள் ; விநோத, வேடிக்கைக்கதைகள், சம்பவங்களைப்பற்றியே படிப்பர். அவற்றிலுள்ள கட்டுரைகள், செய்யுட்கள், ஆழ்ந்த கருத்துக்கள் அமைந்த விஷயங்களைப் பொருட்படுத்துவதில்லை. மொழித் தேர்ச்சி, விஷய ஞானம் இவற்றைக்குறித்து சிந்தனை இருப்பதில்லை.

இவ்வித வருந்தத்தக்க நிலை ஒழியவேண்டும். இதனை ஆசிரியர் சற்றுக்கவனித்து, பாடபுத்தகங்களைமாத்திரம் படித்துவிட்டு மாணவர்கள் வாளாவிருக்கவிடாமல், ஏனைய நூல்களையும், பத்திரிகைகள் போன்றனவற்றையும் அவர்கள் **சுயமாய்ப் படிக்கும்படி** தூண்டவேண்டும்.

இந்தப் பழக்கம் பாடசாலையில் படியாவிடில் மாணவர்களது பாடசாலைப் படிப்பு பாடசாலையோடு நின்றுவிடும். பின்னர் தொடர்ந்து தாமாகவேபடித்து அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்ற அவா ஏற்படாது. எனவே, மாணவர்கள் சுயமாகப் படிக்கும் பழக்கம் அமையும்படி ஆசிரியர் தம்மாலானதைச் செய்ய முற்படவேண்டும்.

பிற்கால ஜீவியத்தை நிம்மதியுடன் நடத்த மாணவர்கள் இஷ்டப்படமாட்டார்களா ? அதற்குவேண்டிய பொது அறிவை அவர்கள் எங்ஙனம் தேடுவர் ? இலக்கியம், சரித்திரம், பூகோளம், அரசியல் முதலிய பல நூல்களின் அறிவு போதுமான அளவு

வேண்டும். பாடபுத்தகங்களிலிருந்தே தேவையானதெல்லாம் கிடைத்துவிடமாட்டாது. பாடபுத்தகம் என்பது ஒரு தூண்டு கோல் போன்றது. எனவே மாணவர்கள் ஷெ பொது அறிவை ஏனைய நூல்களையோ சஞ்சிகைகளையோ படித்துத் தாமாகவே பெற்றுக்கொள்ளவேண்டும். பாடசாலையை விட்டபிறகும் கூட தொடர்ந்து தாமே படித்து வரவேண்டும். ஆரம்பப்பாடசாலை களில் ஏதோ சொற்பம் படித்துவிட்டுப் பின்னர் வாசிப்பை அடியோடு நிறுத்திவிடுவது சகஜமாய் இருக்கிறது. நம் நாட்டில் படிப்பின்மை தாண்டவமாடுவதற்கு இது ஒரு முக்கிய காரண மாகும்.

ஆகவே, பாடசாலைகளிலேயே மாணவர்கள் சுயமாகப் படிக் கும்படி திட்டம்செய்து அவர்களை அப்பழக்கத்திற்கு உட்படுத்தி விடவேண்டும். இதுபற்றியே பாடசாலைகளில் "புத்தகசாலை," "வாசகசாலை" என்பன நிறுவப்படவேண்டும் என வற்புறுத்தப் படுகிறது. ஆனால் அவற்றால் மாணவர்கள் பயன் எய்தாவிடில், அந்த ஸ்தாபனங்கள் இருந்தும் பயன் இல்லை. மாணவர்கள் அவற்றால் பயனடையும்படி ஆசிரியர் செய்யக்கூடிய பலவற்றுள் சிலவற்றை இங்கு சுருக்கிக் கூறுவோம்:—

(1) பரீட்சை ஒரு தேவையான காரியம் என்றாலும், அதைப் பிரமாதப்படுத்தியும், பாடபுத்தகங்கள் மாத்திரமே முக்கியம் என வற்புறுத்தியும் வருகின்ற வழக்கத்தைச் சற்று மாற்றிக்கொள்ளவும்.

(2) சுயமாய்ப் படிப்பது, எவ்வளவு இன்பத்தையும், பயனை யும் தரவல்லது என்பதை விளக்கிக் காட்டவும்.

(3) புத்தகசாலை, வாசகசாலை இவற்றிலுள்ள புத்தகங் களைப் பிள்ளைகளின் வயது அறிவு தேர்ச்சி இவற்றிற்கு ஏற்ற வண்ணம் வகைசெய்தும், ஆசிரியர் தாமே படித்தும் சித்தம் செய்துகொள்ளவும்.

(4) சிறுவர்க்கு, படங்கள்நிறைந்த புத்தகங்கள்—சிறு சிறு கதைகள், சரித்திரம், பூகோளம், நீதிபோதனைக் கட்டுரைகள் பாடல்கள் போன்றனவற்றையும், மேல்வகுப்புப் பிள்ளைகளுக்கு, பத்திரிகைகள்போன்ற வெளியீடுகளையும் சேர்த்து, வாசிப்பில் ஆசையைத் தூண்டவும்.

(5) பாடசாலைக் கால அட்டவணையில், தனி வாசிப்புக்கு நேரம் குறிக்கவும்.

(6) **மௌன வாசிப்பு** பாடதிட்டத்தில் முக்கியமான ஸ்தானம் பெற்றிருப்பதை அறிந்துள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் சுயமாய்ப் படிக்கும் பழக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதை மறக்கமாட்டார்கள். எனவே, மாணவர்களின் தனி வாசிப்பைக் கவனித்து பயிற்சிகள் கொடுத்துவரவும்.

(7) பிள்ளைகள் சுயமாய்ப் படித்ததை ஆசிரியர் தணிக்கை செய்ய உதவும்படி "குறிப்புப் புத்தகங்களை" மாணவர்கள் வைத்து உபயோகித்து வரவேண்டும். ஆசிரியரும் தமக்கென ஒரு குறிப்புப் புத்தகம் வைத்துக்கொண்டு, பிள்ளைகளின் தேர்ச்சியைப்பற்றி பேரேடுபோட்டு, கவனித்து வரவேண்டும்.

(8) சமயாசமயங்களில், பிள்ளைகள் வாசகசாலையில் (அல்லது தனிப்படிப்பு வகுப்பில்) படித்ததைப் பகிரங்கமாய் எடுத்துக் கூறும்படியாயும், தர்க்கிக்கும்படியாகவும் செய்யலாம். கட்சி பிரித்து ஆராய்தல் முதலிய பல வேலைகளைச் செய்யலாம்.

இவ்வாறு தகுந்தபடி, ஏற்பாடுகள்செய்து மாணவர்களிடம் சுயமாய்ப் படிக்கும் பழக்கம் படியும்படி ஆசிரியர் பாடுபடுவது அவசியமாகும். இப் பழக்கம், பாடசாலையைவிட்டு மாணவர்கள் வெளியேகினபிறகும்கூட வாசிக்கும் பழக்கம், வழக்கமாகிவிடும். அது ஜீவியத்தில் உற்றதுணையாகி நின்று உய்விக்குமென்பதில் சந்தேகம் இல்லை.

---

**மாமன்** :—சுந்தரம், இந்த லட்டுமிட்டாயை எறும்பு வராத இடத்தில் கொண்டுபோய் வை.

(சுந்தரம் லட்டைத் தின்றுகொண்டிருப்பதைப் பார்த்து)

**மாமன்** :—ஏண்டா, லட்டைத் தின்கிறாய்?

**சுந்தரம்** :—ஏன்! நான் வாயில் போட்டு வைக்கிறேன்! அங்கு எறும்பு வராதல்லவா?

A. Louis, VII Std.

---

# அணியியல்

(M. A. S. Udaiyar)

அணியென்பது 'அழகு'. அது ஈண்டுச் செய்யுட்குரிய அழகை விரித்து உணர்த்துவதாகும். அவ்வணி பொருளணியும் சொல்லணியும் என இருவகைப்படும். அவற்றுட் பொருளணியாவது செய்யுட்களின் பொருளமைதியின் பயனாகத் தோன்றும் அழகேயாகும். அப்பொருளணி (36) முப்பத்தாறு வகைப்படும் என்றும் அவற்றினும் அதிகமாகும் என்றும், தொகையையும் வகையையும் விரிப்பின் ஆயிரக்கணக்காக வரும் என்றும் கூறுகின்றனர். விரிவை விடுத்து உரியவற்றைச் சிறிது ஆராய்வாம்.

"உவமையணி". உவமையணியாவது செய்யுட்களிலே கூறுதற்குரிய உவமான உவமேயங்களை விளங்க உணர்த்துவதாகும். அவ்வணியானது "தொழில், பயன், உறுப்பு (சினை), வடிவு" என்ற நான்கும் காரணமாகத் தோன்றும். அது தொகையுவமையும் விரியுவமையும் என இருவகைப்படும். தொகையுவமையாவது :—உவமானம், உவமேயம், பொதுத்தன்மை, உவம உருபு என்னும் நான்கனுள் ஒன்றும் பலவும் குறைந்து வருவதாகும். உதாரணம்.—

"புயற்கருங் குழலாள் காந்தட்போதினை நிகர்க்குங் கையாள்
கயற்கணாள் முகத்திற்கொப்பாங் காந்திகொள்
பொருளுண்டோவாய்
நயச்சிவப்புளதொன்றில்லை நாசிபோல்வது மற்றாகும்
குயிற்கிளவியினாள் பாவை குணத்தையார் குறிக்கவல்லார்!"

இச்செய்யுளுள் 'புயற்கருங் குழலாள்' என்ற தொடரில் **புயல்** உவமானம் **குழல்** உவமேயம் **கருமை** பொதுத்தன்மை. போலும் என்ற உவம உருபு ஒன்றும் இல்லாததனால் இது உருபுத்தொகையுவமை. 'காந்தட்போதினை நிகர்க்கும் கையாள்' என்ற தொடரில் **காந்தட்போது** உவமானம் **கை** உவமேயம். **நிகர்க்கும்** உவம உருபு. செம்மையென்ற பொதுத்தன்மை ஒன்றும் இல்லாததனால் இது பொதுத்தன்மைத் தொகையுவமை. 'கயற்கணாள்' இத்தொடரில் **கயல்** உவமானம் **கண்** உவமேயம் பொதுத்தன்மையான **புரளும்** என்பதும் உவம உருபாகிய போலும் என்பதும் இல்லாததனால் பொதுத்தன்மையுருபுத் தொகையுவமையாகும். பிறவும் இவ்வாறே ஒப்பிட்டு உணர்ந்து கொள்ளப்படும்.

விரியுவமை :—விரியுவமையாவது மேற்கூறப்பட்ட உவமானம், உவமேயம், பொதுத்தன்மை, உவமஉருபு ஆகிய நான்கும் வெளிப்பட்டுவருவதாகும். உதாரணம்.—

"பால்போலு மின்சொல் பவளம்போற் செந்துவர்வாய்
சேல்போற் பிறழுந் திருநெடுங்கண்—மேலாம்
புயல்போற் றடக்கைப் புனனுடன் கொல்வி
அயல் போலும் வாழ்வதவர்"

இச்செய்யுளில் "பால்போலும் இன்சொல்" என்ற தொடரில் **பால்** உவமானம் **சொல்** உவமேயம் **(இன்) இனிமை** பொதுத் தன்மை **போலும்** உவம உருபு. இவ்வாறே பிறவற்றையும் உணர்ந்துகொள்ளுக.

---

## ஒரு சிறிய நாட்டுப்பாடல்

(K. S. Antoniswamy)

### மூன்று குளம் வெட்டினேன்

முள்ளு முனையிலே மூன்றுகுளம் வெட்டினேன்;
இரண்டுகுளம் பாழ்; ஒரு குளம் தண்ணீரே இல்லை.
தண்ணீரில்லா குளத்திற்கு மண்ணுடையான் மூன்றுபேர்;
இரண்டுபேர் நொண்டி; ஒருவனுக்குக் கையே இல்லை.
கையில்லாத்தேவன் செய்தபானை மூன்று பானை;
இரண்டுபானை பச்சை; ஒன்று சுடவே இல்லை.
சுடாத பானைக்கு விட்டரிசி மூன்றரிசி;
இரண்டரிசி பச்சை; ஒன்று வேகவே இல்லை.
வேகாத அரிசிக்கு விருந்து வந்தார் மூன்றுபேர்;
இரண்டுபேர் பட்டினி; ஒருவர் உண்ணவே இல்லை.
உண்ணாத தேவனுக்கு விட்டகாடு மூன்று காடு;
இரண்டுகாடு பொட்டல்; ஒன்றில் புல்லே இல்லை.
புல்லில்லா காட்டுக்கு வரிப்பணம் மூன்றுபணம்;
இரண்டுபணம் செம்பு; ஒன்று செல்லவே இல்லை.
செல்லாத பணத்திற்கு நோட்டக்காரன் மூன்றுபேர்;
இரண்டுபேர் பொட்டை; ஒருவனுக்கு கண்ணே இல்லை.

---

OFFICE OF THE R... 15 AUG ...2 MADRAS

## பாடக் குறிப்பு

(A. Lazar)

பாடம் : தமிழ். பாகம் : பதங்கள் அமைத்தல்.

I Standard

**நோக்கம் :** பதங்கள் அமைத்துப் படித்தல்.

**உபகரணங்கள் :—**

சங்கிலி, கட்டில், பதக்கம், புத்தகம் இவற்றின் படமும் சொற்களும் சேர்ந்த உபகரணங்கள், வாசிப்பு அட்டைகள் (Flash-cards) படங்கள், எழுத்துக்கள் (வெட்டு எழுத்துக்கள்).

**பீடிகை :** பழைய பாடத்தை வாசிக்கச்செய்து சொல்வதெழுதல், பூர்த்தி செய்தல் முதலிய அப்பியாசங்கள் கொடுத்த பின் புதிய பாடத்தைத் தொடங்குக.

**நோக்க வெளியீடு :** சில வார்த்தைகள் படிக்கப்போகிறோம் எனக் கூறி பாடத்தை ஆரம்பித்தல்.

**விஷயம் :—**

சங் கி லி
க ட் டி ல்
ப த க் க ம்
பு த் த க ம்

**முறை :** பொருள்களையும் படங்களையும் (சங்கிலி, கட்டில், பதக்கம், புத்தகம்) காட்டி அவைகளைப்பற்றி சம்பாஷித்து வார்த்தைகளை வருவித்து அப்பதங்களைக் கரும்பலகையில் பெரிதாகவும், திருத்தமாகவும், நிதானமாகவும் எழுதுக. (புதிய எழுத்துக்களை வர்ணத்தால் எழுதவேண்டும்).

உச்சரிப்புப் பகுதியில் அதாவது எழுத்துக்களைச் சாவகாசமாய் இழுத்துச் சொல்வதாலும், பிறகு அவற்றைப் பிரித்துச் சொல்வதாலும் சில ஒலிகளின் சேர்க்கையே சொல் என்பதை மாணவர்கள் உணர்வார்கள்.

உதாரணமாக சங்.........கிலி என்று பிரித்துப் பலமுறை சொல்லச் செய்வதால் அவ்வெழுத்துக்களின் சேர்க்கையே சங்கிலி என்ற சொல்லாகும் என்பது சிறுவர்களுக்குத் தெரியலாகும்.

வாசித்தல்: விஷயத்தில் கண்ட பதங்களை க. ப. வில் எழுதி மாதிரியாக ஆசிரியர் திருத்தமாகவும் தெளிவாகவும் வாசித்துக்காட்டுதல். பிள்ளைகளைப் பின்பற்றி வாசிக்கச் செய்தல். வாசிக்கும்போது ஏற்படும் தவறுகளை உடனுக்குடனே திருத்தல்.

அப்பியாசம்: கரும்பலகையிலுள்ள பதங்களை வாசிக்கச் செய்தபின் பின்வரும் அப்பியாசங்களையும் கொடுக்கலாம்.

1. படங்களையும் வார்த்தைகளையும் இணைத்தல்.

2. பூர்த்திசெய்: ச—கிலி, கட்—ல், பத—கம், புத்—கம்.

3. யாவரும் பார்த்து வாசிக்கக்கூடிய பிரதியினின்றும் (Reading chart) படங்களைப் பார்த்தமாத்திரத்தில் வாசித்தல்.

4. வெட்டு எழுத்துக்களைக் கோர்த்துப் பதங்கள் அமைத்தல்.

க. ப. சு.

**ச ங் கி லி**
**க ட் டி ல்**
**ப த க் க ம்**
**பு த் த க ம்**

குறிப்பு:—

1. பிள்ளைகள் பொருள்களையும் விஷயங்களையும்பற்றி முதலில் படித்த பின்பே அப்பொருள்களின் பெயர்களில் அடங்கிய எழுத்துக்களை அறிதல்வேண்டும். படங்களை முதலில் படிக்கச் செய்யவேண்டும். பிறகு அவர்கள் முழுச் சொற்களையும் ஒரு படம் போல பார்த்தறியவேண்டும். முதலில் படங்களையும், பிறகு சொற்களையும், பிறகு அச்சொற்களை எழுத்தெழுத்தாகவும் சொல்ல அறியவேண்டும்.

2. எழுத்துக்காட்டி வாசிக்கச் செய்யவே கூடாது. மொத்தமாகவே வாசிக்கவேண்டும்.

3. படிக்கும்போது சொற்களைப் பாராமல் படித்துவிடுவார்கள். சில பிள்ளைகள் சொற்களின் உருவங்களைக் கவனிக்காமலே தடதடவென்று சொல்லிப்போவார்கள். சொற்களைப் பார்த்து அறிந்து சொல்லுகிறார்களா என்று ஆசிரியர் எச்சரிக்கையுடன் பார்த்து வரவேண்டும்.

## பள்ளிக்கூடங்களில் தேகப்பயிற்சி

(V. M. Joseph, Physical Director, R. C. Training School)

தற்காலக் கல்வித்திட்டத்தில் தேகப்பயிற்சிப்பாடம் தனியிடம்பெற்று விளங்குகிறது. மனிதன் தன் தேகத்தில் எந்த உறுப்பின் இயக்கத்தில் பூர்ண ஆதிக்கம்கொள்ளுகிருனே அவ்வுறுப்பு வலுவுற்று திறம்பட தொழில்புரிகிறது. ஒவ்வொரு உறுப்பும் வலிவும் வனப்பும்பெறவும், அவன் இச்சைப்படி இலகுவில் இயங்கவும் சாதகமான பயிற்சிகளில் முக்யமானவற்றைத் தேர்ந்தெடுத்து நடத்துவதே பள்ளிக்கூட தேகப்பயிற்சி யெனப்படும்.

**தேகப்பயிற்சி பள்ளியில் அளிப்பதின் முடிவான நோக்கங்கள் :—**

(1) முறையொடு அமைந்த தேகப்பயிற்சிகளால் தேகக்கட்டும் தேக சௌக்கியமும் பிள்ளைகளிடத்தில் விருத்தியடையும்.

(2) சீராகக்கூடிய சில உடற்கூறுபாடுகள் சிறுவர்களிடம் காணப்பெறின், அவைகளைச் சீர்படுத்துவதற்குத் தேகப்பயிற்சி ஓரளவு முக்யம். வெறுக்கத்தக்க சில உடற்கூறுகளையும் ஏற்படாமல் தடுக்கும்.

(3) தேக சுகாதார சாஸ்திரத்திலும் இட சுகாதார சாஸ்திரத்திலும் போதிய போதனை பெறுதல்.

(4) ஒழுங்கு முறையாலும் தன்னடக்கத்தாலும் சுயநலமின்மையாலும் சிறுவர்கள் நற்குண நற்செய்கைகளில் சிறந்து விளங்குவார்கள். அவர்களிடம் உண்மையான விளையாட்டின் உயர்ந்த தத்வங்களைக் காணலாம்.

தேகப்பயிற்சிகளின் மேன்மையை உடற்கூறு சாஸ்திரமும் மனுேதத்வ சாஸ்திரமும் உணர்த்துகின்றன. தேகப்பயிற்சியே எப்பயிற்சியிலும் சிறந்ததென வலியுறுத்துகின்றன.

### இருவித தேகப்பயிற்சிகள்

I. ஒழுங்கு பூர்வமானவை :—

(a) கைகளை லாவகமாகக்கொண்டு செய்யும் அப்பியாசங்கள்.

(b) எளிய, இலேசான கருவிகளைக்கொண்டுள்ள அப்பியாசங்கள்.

(c) பளுவான கருவிகளைக்கொண்டுள்ள அப்பியாசங்கள்.

II. சாதாரணமானவை :—

(1) குழு விளையாட்டுகள் (சிறுவர்களுக்கு)
(2) நாட்டு அப்பியாசங்கள் (குஸ்தி, சிலம்பம்) etc.
(3) பெரிய விளையாட்டுகள் (கால் பந்து, கிரிக்கெட்டு) etc.

தேகப்பயிற்சிகளைப் போதிக்கையில் சிற்சில விதிகள் :—

(1) எளிய அப்பியாசங்களிலிருந்து கடினமானவற்றிற்குச் செல்லவேண்டும்.

(2) சுயேச்சையாகச் செய்தல்வேண்டும். நிர்ப்பந்தம் கூடாது.

(3) மாணவர்கள் தனித்தனியாகச் செய்வதைவிட, கூட்டாகச் செய்தல்வேண்டும்.

(4) வயதுக்கேற்ப சக்திக்கேற்ப தேர்ந்தெடுத்து அப்பியசிக்கவேண்டும்.

தேகப்பயிற்சி பாடத்தில் நூலளவுடன் நிற்றல் ஒருவகை; செய்து அநுபவ பூர்வமாய்த் தேர்ச்சிபெறல் மற்றொருவகை.

விளையாட்டுகளால் கிட்டும் பலன்களை மூன்று அம்சங்களில் காணலாம்.

1. மனோவளர்ச்சி. 2. உடல் வளர்ச்சி. 3. ஒழுக்க வளர்ச்சி.

சிறுவர்களுக்குச் சிறந்த பொழுதுபோக்காக இருப்பதுடன் நற்பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ளச் செய்கிறது. நற்பழக்கம் நற்குணம் தரும். தேகப்பயிற்சிப் பாடத்தில் சிறுவர்களுக்கு எவ்விதம் துணைபுரியலாம்?

(1) பற்பல விளையாட்டுகளில் ஈடுபடச்செய்தல்.

(2) நல்ல முறையில் விளையாடும் வழக்கத்தையுண்டு பண்ணல்.

(3) தன்னொடுக்கம், ஒழுக்கம், கூட்டுறவு, பாரபட்சமின்மை, மரியாதை இவைகளை நிலைநாட்டச் செய்தல்.

(4) ஆசிரியரும் ஈடுபடவேண்டும்.

ஆகவே தேகப்பயிற்சி, கல்வியென்னும் அழியாப்பொருளை பாலர்களுக்கு அளிப்பதில், முக்ய மூலதனம்போல் ஆகும். இச்சிறந்த பாடத்தை அதற்கெனத் தேர்ந்த ஆசிரியரே கைக்கொண்டு போதிக்கவேண்டும்.

# பூகோளம் போதிப்பதெப்படி?

(I. Anthony.)

(கொத்து 32, மலர் 10, 11, பக்கம் 294-ன் தொடர்ச்சி.)

உலக பூகோள போதனையைப்பற்றி இனி சிறிது கவனிப்போம். உலகமானது ஐந்து கண்டங்களாகியது. இந்த ஐந்து கண்டங்களும் வடகண்டங்கள் (பூமத்திய ரேகைக்கு வடக்கிலுள்ள கண்டங்கள் ஆசியா, ஐரோப்பா, வட அமெரிக்கா) தென் கண்டங்கள் (பூமத்திய ரேகைக்குத் தெற்கிலுள்ள கண்டங்கள் தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா) என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் (1941) ஏற்பட்ட பூகோள பாட திட்டத்தின்படி 6-ம் வகுப்பிற்கு தென்புறக் கண்டங்களைப்பற்றிய அறிவும், 5-ம், 7-ம் வகுப்புகளுக்கு வடபுறக் கண்டங்களைப்பற்றிய அறிவும் ஊட்டவேண்டியிருக்கிறது.

ஒரு கண்டத்தைப்பற்றி போதிக்கத் துவக்குமுன், பாடத் திட்டத்தில் கொடுத்துள்ளபடி அக்கண்டத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ளவேண்டும். உதாரணமாக ஆப்பிரிக்கா கண்டத்தைப்பற்றி 6-ம் வகுப்பிற்குப் போதிக்க, பாடத்திட்டத்தில் கொடுத்துள்ளபடி கீழ்க்கண்ட வாரியாகப் பிரித்துக்கொள்ள வேண்டும்.

1. ஆப்பிரிக்காவைப்பற்றிய முன்னுரை. (கண்டுபிடிக்கப் பட்டவிதம், கண்டுபிடித்தவர்கள் முதலியன.) பார்பரி நாடுகள்—மத்தியதரைக்கடல் பிரதேசங்கள்.

2. பாலைவனமும் ஒட்டகச் சவாரி செய்யும் மனிதனும்.

3. எகிப்தும் நைல் நதியும்.

4. நீக்ரோ விவசாயிகளும், மேற்கு ஆப்பிரிக்கா விவசாயமும்.

5. காங்கோப் பிரதேச மக்கள்.

6. கிழக்குப் பீடபூமியும் அதன் எரிமலைப் பள்ளத்தாக்கும் (Rift Valley) காட்டு மிருகங்களும்.

7. தெற்கு ஆப்பிரிக்கா—நீர் வீழ்ச்சிகளும், (விக்டோரியா) அதனால் ஏற்படும் பள்ளத்தாக்குகளும் (gorge).

8. தெற்கு ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள்—எங்கு வசிக்கிறார்கள் (மோரீஸ், நெட்டால்). பயிர்கள்—முக்கிய வாழ்க்கைத் தொழில்கள்.

9. கெப்ரோ—மம்பாஸா—ஸான்ஸிபார்.

10. ஜோஹான்ஸ்பர்க்—டர்பன்—கேப்டவுன்.

11. மக்களின் பிரயாண வசதிகள் — ஆப்ரிக்காவில் சாமான்களைக் கொண்டுசெல்லும் விதங்கள்.

இவ்விதம் பிரித்துக்கொண்டபின் ஒவ்வொன்றையும் தனித் தனியே எடுத்துப் போதித்தல்வேண்டும். முகவுரைப் பாடத்தில், ஆப்பிரிக்கா கண்டத்தைக் கண்டுபிடித்த வரலாறு பூமியில் அதன் இருப்பிடம் (18° மேற்குமுதல் 50° கிழக்குவரையில், 35° வடக்கு முதல், 35° தெற்குவரையில்) முதலியவற்றை எடுத்துரைக்கலாம். பாடத்திட்டத்தில் கொடுத்துள்ள எகிப்தும் நைல் நதியும் என்ற பாடத்தை 6-ம் வகுப்பிற்குப் போதிப்பதைப்பற்றி பார்ப்போம்.

இப்பாடம் போதிக்கத் துவக்குமுன் பிள்ளைகளிடம் கீழ் வரும் கேள்விகளைக்கேட்டு பதில் வருவிக்கலாம்.

1. உலகத்திலுள்ள கண்டங்களெத்தனை? அவைகள் யாவை?

2. அவற்றுள் தென்புறக் கண்டங்கள் யாவை?

3. இக்கண்டங்களுள் நம் இந்தியாவிற்கு மேற்கே இருப்பது எது? (ஆப்பிரிக்கா)

இப்போது நாம் ஆப்பிரிக்காவிலுள்ள எகிப்தையும், அதில் பாயும் நைல் நதியையும்பற்றி படிப்போம் என்று சொல்லிப் பாடம் ஆரம்பிக்கலாம்.

முதலில் ஆப்பிரிக்கா கண்டத்தின் வெற்றுப்படத்தில் (Outline Map) எகிப்து தேசத்தின் இருப்பிடத்தை எல்லை களுடன் (கிழக்கே செங்கடல், மேற்கே லிபியா, வடக்கே மத்தியதரைக்கடல், தெற்கே ஆங்கிலோ எகிப்திய சூடான்) வரைந்து அதில் நைல் நதியின் போக்கையும் குறித்து காண்பித் தல்வேண்டும். எகிப்தானது (சஹாரா) பாலைவனமேயென்பதை யும் ஆனால் அதில் நைல் நதி பாய்வதால் செழிப்புற்றிருக்கிறதென் பதையும் எடுத்துரைக்கவேண்டும். பின்பு எகிப்தில் விளையும், விளைபொருள்களைப்பற்றிப் பேசலாம். (நெல், பருத்தி, கோதுமை முதலியன) இவைகள் அங்கு விளைவதற்கு உள்ள சாதனங்களை

182299

யும் எடுத்துரைக்கவேண்டும். (நைல் நதியில் அஸ்வான் என்னுமிடத்தில் அணைகட்டி நீரைத் தேக்கி கால்வாய்களின்மூலம் நிலங்களுக்குப் பாய்ச்சி பயிர் செய்கிறார்கள்). பின்பு இதன் தலைநகரம் (கெய்ரோ) துறைமுகம் (அலெக்ஸாண்டிரியா) முதலியவற்றைக் கூறுவதுடன் அவற்றைப் படத்திலும் போட்டுக் காட்டவேண்டும். மேற்கூறிய துறைமுகத்தின் வழியாகப் பருத்தி இங்கிலாந்திற்கு ஏற்றுமதியாவதையும் கூறவேண்டும். உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் 'பிரமிட்ஸ்' என்னும் கல்லறைக் கோபுரங்களைப்பற்றியும் பேசுவதுடன் அவற்றை படம் போட்டும் காட்டலாம். பின்பு எகிப்து பாலைவனத்தைச் சேர்ந்திருந்தபோதிலும் நைல் நதியினால் முன்னேறி இருப்பதால் இதற்கு 'நைல் நதியின் நன்கொடை' என்று கூறுவதுண்டென்று சொல்லிப் பாடத்தை முடிக்கலாம்.

இப்படத்தை இவர்கள் ஏற்கனவே படித்த (4-ம் வகுப்பில்) சிந்து சமவெளியுடன் ஒப்பிட்டுக் காட்டலாம். நைல் நதி சஹாரா பாலைவனத்தின் வழியாக ஓடுகிறது. அதில் அஸ்வான் என்னும் இடத்தில் அணை கட்டி நீரைத் தேக்கி எகிப்தில் பல இடங்களுக்குப் பாய்ச்சி நெல், கோதுமை, பருத்தி முதலியன பயிர் செய்கிறார்கள். அதன் முகத்துவாரத்திலுள்ள அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தின் வழியாக பருத்தி இங்கிலாந்திற்கு ஏற்றுமதியாகிறது. அதேபோல் சிந்துநதி தார் பாலைவனத்தின் வழியாக ஓடுகிறது. அதில் சுக்கூர் என்னும் இடத்தில் அணை கட்டி அதன் நீரை சிந்து மாகாணத்தின் பல இடங்களுக்கும் கால்வாய்களின்மூலமாய் பாய்ச்சி, பருத்தி, நெல், கோதுமை முதலியன பயிர் செய்கின்றனர். அதன் முகத்துவாரத்திலுள்ள கராச்சி என்னும் துறைமுகத்தின் வழியாக கோதுமை இங்கிலாந்திற்கு ஏற்றுமதியாகிறது. இவ்விதமாக நாம் இவ்விரண்டையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டுக் காட்டலாம்.

---

[வக்கீல் சாட்சியிடம் (தனிமையில்) "உம்மைக் கோர்ட்டில் பல விதத்திலும் கேள்வி கேட்பார்கள், எதற்கும் "சுமார்" என்று பதில் சொல்லும்:]

நீதிபதி :—ஓய்! உம்முடைய பெயர் என்ன?

சாட்சி :—என் பெயர் சுமார் சுப்பு முதலியார்.

---

## சிறு கதை

(M. Bilavendram)

### சுதந்திரம் விரும்பிய புலி

ஓர்நாள் ஒரு புலி ஒரு நாயைப் பார்க்க நேர்ந்தது. அப்போது புலி "வாருமையா நாயனரே, உம்மைப் பார்ப்பது அத்திப் பூத்தாப்போலிருக்கிறதே" என இருவரும் சேமலாபங்கள் விசாரிக்கத்தொடங்கினர்கள். முதலில் புலி தன் வாயைத் திறந்து, 'நான் காட்டில் வசிக்கிறேன், மாரிகால மழையும், கோடைவெயிலும் என்மேலேதான் தாக்குகின்றன; ஆகையினல்தான் என் உடம்பெல்லாம் ஒரே மயிராக இருக்கிறது; எனக்கோ வீடுவாசல் என்பதும் கிடையாது, பசியாற உண்ணவும் வழியில்லை ஆகையால் நான் மெலிந்து திடகாத்திரமற்றுப்போனேன்' என்று பரிதாபகரமான குரலில் பகர்ந்தது.

அதைக்கேட்ட நாய், 'நான் என் எஜமானனின் வீட்டில் வசிக்கிறேன், எந்தநாளும் நான் சௌகரியமான இடத்தில் இருக்கிறேன், எனக்குச் சாப்பாட்டிற்கோ குறைவில்லை, இதோ என்னைப் பார், நான் எப்படி இருக்கிறேன்' என்று கம்பீர தொனியுடன் உறுமிற்று.

இதைக்கேட்ட புலிக்கு வாய் ஊறிற்று. நானும் உன்னைப் போலாகவேண்டுமானல் என்ன செய்யவேண்டும் என்று வெகு ஆவலுடன் கேட்டது. அப்போது நாய் நீ என் எஜமானின் வீட்டைப் பாதுகாக்கவேண்டும், திருடர்கள் வந்தால் அவர்களைக் காட்டிக்கொடுக்கவேண்டும் என்றது. அப்படியானல் இது எனக்கு இலகுவான வேலையாச்சே, என்னைக் கண்டாலே திருடர்கள் கிட்ட வரமாட்டார்கள், ஆகையால் வீட்டைப் பாதுகாப்பது ஒன்றுதான் என் வேலை என்று சொல்லி வீட்டைநோக்கி நடக்கும்போது நாயின் கழுத்தில் ஒரு தழும்பைக் கண்ட புலி அது என்னவென்று கேட்டது. அப்போது நாய் இது வேறொன்றுமில்லை. கதவின் அருகில் என்னை எப்போதும் கட்டிவைத்திருப்பார்கள். அதினல் உண்டான தழும்புதான் இது என்றது.

அதைக்கேட்ட புலியானது உனக்கு என்னைப்போல் கண்ட இடமெல்லாம் போகச் சுதந்திரம் இல்லைபோலும், எது இல்லாத போனலும் எனக்குச் சுதந்திரம் மட்டும் இருந்தால் போதும் எனக் கூறி, காட்டிற்குள் ஓடிவிட்டது.

---

# தாவர நூல்

## நுண்ணுயிர்கள்

### (M. V. Rajendram)

மனிதன் 'உருப்பெருக்கி' என்னும் பூதக்கண்ணுடியைக் (Microscope) கண்டுபிடித்தபின் எண்ணிலடங்காத நுண்ணுயிர்கள் உலகில் சஞ்சாரஞ் செய்வது மாந்தர்க்குப் பட்டப்பகல் போல் துலங்கியது. காற்றிலும், கடலிலும், சேற்றிலும், ஊற்றிலும், மக்களிலும், மாக்களிலும், மரங்களிலும் நுண்ணுயிர்கள் நிறைந்து நிற்கின்றன. எனினும் சாதாரணமாக அவை நமது கண்ணுக்குத் தென்படுவதில்லையாதலின் அவற்றை நாம் சட்டை செய்வதில்லை.

பொதுப்பட இந்நுண்ணுயிர்களை 'பேதகன்' (Bacteria) என்றழைப்பர். பெரும்பான்மையோர் இப்பேதகன்கள் பிராணி வர்க்கத்தைச் (animal kingdom) சேர்ந்தவை என்று எண்ணுவர். இவை பிராணிகளல்ல; தாவரங்கள்; தாவர வர்க்கத்தைச் (Vegetable kingdom) சேர்ந்தவை.

இத்தாவரங்கள் இதுவரையும் கண்டுபிடிக்கப்பட்டவைகளுள் மிகவும் சிறியவை. இவைகளில் சிலவகை எவ்வளவு சிறியவை என்ருல் 25,000 உயிர்கள் ஒன்ரேடொன்று தொடும்படி நீட்டினுலும் ஒரு அங்குலத்துக்கு மேற்படா. இவைகள் பல உருவங்களாகக் காணப்படுகின்றன. எதிலும் ஒட்டிக் கொள்ளும் தன்மை வாய்ந்தவை. அநேகமாய் இவை சிறு குச்சுகள்போல் நீண்ட வடிவம் உடையவை. சில வட்டமாயும், சில கம்பிச்சுருள்போலவும் வடிவமுள்ளவை.

ஒரு பேதகன் இரண்டாகத் துண்டித்துக்கொள்ளும். துண்டான இரு பேதகன்களும் போதிய உணவு எடுத்து விரைவில் வளர்ந்து மறுபடியும் பிரியும். இப்படியே இவைகள் சௌகரியமான இடங் கிடைக்கும்போது ஏராளமாகப் பலுகிப் போகும். இவைகளின் உணவு, பாதுகாப்பு இவற்றிற்குத் தகுந்தவாறு எப்போதும் சௌகரியம் கிடைக்குமானுல் இத்தகைய ஒவ்வொரு சிறிய அணுவும் ஆறு நாட்களுள் உலகத்தையே விடப் பெரியதொரு கும்பலாகிவிடுமாம். அசௌகரியமான சமயம் உயிரற்றதுபோல் கிடந்து மறுபடியும் தகுந்த சமயம் வேலை செய்ய ஆரம்பிக்கும்.

தூசிபோல் இருப்பதால் பேதகன்கள் காற்றால் அடித்துக் கொண்டுபோகப்பட்டு ஆகாயத்தில் மிதந்து திரியும். காற்று அமர்ந்ததும் திரும்பவும் தரைக்கு வரும்.

பேதகன்கள் வளர்ச்சியுற்ற தாவரங்களைப்போல் தங்கள் ஆகாரத்தைத் தாங்களே தேடிக்கொள்ளமுடியாது. ஆகவே அவைகள் அழுகிப்போன தாவரப்பொருள்களையும் மாமிசப் பொருள்களையும் உணவாகக்கொள்ளும். உண்மையில் உயிரற்ற பொருள்களை அழுக வைப்பதும், அழிப்பதும் பேதகன்களே. இவைகள் இல்லாவிடில் உலகெங்கும் இறந்த பிராணிகளின் உடல்களும், உயிரற்ற தாவரவஸ்துகளும் அப்படியே குவிந்து கிடக்கும். அழுகா, அழியா. அப்படியாயின் தாவரங்களுக்கு உணவு கிடைக்காது. தாவரங்களின்றேல் பிராணிகள் வாழா. பிராணிகளும் தாவரங்களும் இன்றேனில் மனிதன் உயிர் தாங்கான்.

இப்பேதகன்களுள் நன்மை பயப்பனவும் உள. பேதகன்களால் வயலுக்கு வேண்டிய எரு கிடைக்கின்றது. சிலவகைப் பேதகன்கள் தாவரங்களின் வேர்களில் தங்கி ஓர்வித உருண்டையான கூடுகள் கட்டி வேர்களுக்கு வேண்டிய உப்புவாயுவைச் (nitrogen) சேர்த்து வைக்கின்றன.

வேறொரு வகைப் பேதகன்கள் புளிப்பேற்றுந் தன்மையுடையன. திராக்ஷ ரசம் புளிப்பேறுவதும் ரொட்டிமாவு உப்பிப் புளிப்படைவதும் பேதகன் செய்யும் வேலையாலேயே. 'ஈஸ்ட்' என்னும் பொடியை ரொட்டிமாவுக்கு உபயோகிப்பதுண்டு. ஈஸ்ட்டும் தாவர வகையைச் சேர்ந்த ஓர் வகை நுண்ணுயிரே. புகையிலையும் கொக்கோவும் ஓர் தனி வாசனை கொடுப்பதும் இப்பேதகனாலேயே.

இத்தகைய பேதகன்கள் உயிரற்ற உடல்களில் மட்டுமல்ல உயிருள்ள பிராணிகள்மேலும் ஏறி ஜீவனம் செய்கின்றன. 'நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தாற்போல்' என்பார்களே அதைவிட கொடிய ஆபத்தை இப்பேதகன் புல்லுருவி விளைவிக்கின்றது. டைபாய்ட், காலரா, விஷபேதி, க்ஷயம் முதலிய கொடிய வியாதிகள் இப்பேதகன்களால் உண்டாகின்றன. ஒவ்வொரு வியாதியின் கிருமியும் தனித்தனியே பூதக்கண்ணாடியின் அடியில் சிறு புழுப்போல் தோன்றினாலும் இவை தாவரம் என்பதை மறந்துவிடவேண்டாம்.

மனிதர்களின்மேல் உண்டாகும் 'தேமல்' என்ன என்று நினைக்கிறீர்கள்? அதுவும் ஓர் வகைத் தாவரத்தால் உண்டாகும் வியாதியே. அதிர்ஷ்டம் உடையவர்களுக்குத்தான் தேமல் வரும் என்பார்கள். ஊசிப்போன வடையைப் பிய்த்தால் நீளமாகத் தோன்றும் நூலும் ஓர் தாவரந்தான் என்பது உங்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லையா? இவையெல்லாம் 'பேதகன்கள்' எனும் நுண்ணுயிர்களின் (bacteria) வேலையே.

---

## யோசனைக்கணக்கு விடைகள்

(கொத்து 33, மலர் 1, பக்கம்: 21)

### விடைகள்

1. செம்மறி ஆட்டுக்குட்டியின் விலை ரூ. 4—0—0 வெள்ளாட்டுக்குட்டியின் விலை ரூ. 2—8—0.

2. சிறிய எண் = 10150.

3. பெரிய எண் = 999856.

ஷை விடைகளையளித்தவர்கள் :—(1) R. S. Vellayappan, Teacher, Peria Mattur Gudalore, N. Thalaiyur, P. O. Karur. (2) C. Jeya Mary, S. Joseph's Rice Mill, Perambalore. (3) N. Mudiappan, Teacher, R. C. St. Mary's El. Sch. Cantt., Trichy. (4) G. R. Lawrance, Lab. Sch. Molaguparai, Trichy. (5) Miss M. R. Joseph, Teacher, R. C. Convent, Cheyur. (6) K. S. Antonisamy, (E. 2 A.) (7) A. Antonimuthu, (E. 2 A.) (8) M. Arokiam, (E. 2 A.) (9) M. Santhiagu, (E. 2 A.) (10) S. Arputhasamy, R. C. Ele. School, Sempet, Trichy. (11) S. Joseph-Raj Simson, Lab. School, Karyamanickam.

---

ஹோட்டலில் சாப்பிடுகிறவர் :—என்ன ஐயா! வெங்காய சாம்பாரில் ஒரு வெங்காயங்கூட காணோமே?

ஹோட்டல்காரர் :—என்ன? மைசூர்பாகில், மைசூர் இல்லை என்பீர்போலிருக்கிறதே?

P. Antonimuthu.

---

# கிளைவும் பாளையக்காரனும்

## (ஒரு சிறு நாடகம்)

(S. கோபாலகிருஷ்ணன்)

இடம்: பங்களாவில் ஓர் அறை நேரம் மாலை

பாத்திரங்கள்: மேஜர்லாரென்ஸ், காப்டன்கிளைவ், பாளையக்காரன், துபாஷ், சேவகன்.

லாரென்ஸூம் கிளைவும் மேஜை முன் வீற்றிருத்தல்.

**லாரேன்ஸ்:** (யோசனையை நிறுத்தி கிளைவை நோக்கி) எதிரிகளின் குதிரைப் படைகள் நம்முடையதைக் காட்டிலும் மிகுதியாயிருக்கின்றன. குதிரைகள் இங்கு விலைக்குக் கிடைப்பதோ குதிரைக் கொம்பாகயிருக்கிறது. என்ன செய்வது என்று புரியவில்லை.

**காப்டன்கிளைவ்:** (தான் பார்த்துக்கொண்டிருந்த தரைப் படத்தை தூரவைத்துவிட்டு) எதிரியின் குதிரைகளை குறைத்து விட்டால் நம் எண்ணிக்கைக்கு வந்துவிடும். நாம் நிர்ப்பயமாக விருக்கலாம்.

**லாரேன்ஸ்:** "பூனை கழுத்தில் மணி கட்டு" என்றாற் போல யோசனை சொல்லிவிட்டீரே. எப்படி எதிரி குதிரைகளைக் குறைப்பது?

**காப்டன்கிளைவ்:** குதிரைகளைக் கவன்று விட்டால்......

**லாரேன்ஸ்:** அது தான் எப்படி?

**கிளைவ்:** பிறரைக்கொண்டு கவரச்செய்து நாம் விலைக்கு வாங்கினால்......

**லாரேன்ஸ்:** சபாஷ். ஆர்க்காட்டு வீரரின் யோசனையே அபூர்வமானது. யாரைக்கொண்டு கவரச் செய்வீர்.

**கிளைவ்:** ஏன். பாளையக்காரர்கள்தான் குதிரைகளை கடத்திச் செல்வதில் சமர்த்தர்களாயிற்றே.

**லாரேன்ஸ்:** இக்காரியத்தை உங்கள்கையில் ஒப்படைத்து விட்டேன்.

**கிளைவ்:** அப்படியே ஆகுக (சேவகனைக் கூப்பிட்டு) நமது துபாஷை பாளையக்காரனுடன் வரும்படி சொல்லல்

(துபாஷூம் பாளையத் தலைவனும் வருதல். பாளையத் தலைவன் நெடிய உருவத்தில் கூரிய கண்ணுடன் பெரிய தலைப் பாகையுடன் நீண்ட மெல்லிய அங்கியுடன் கழுத்தில் வீரச் சங்கிலி கைகளில் மோதிரங்கள் மின்ன பொற்பிரம்புதாங்கி பிரவேசித்தல்)

(கிளைவும் லாரென்ஸூம் பாளையத் தலைவரை கூர்ந்து நோக்கல்)

**துபாஷ்** : நான் தங்களிடம் கூறிய பாளையத்தலைவர் இவரே. மிக்க ஆள்கட்டும் செல்வாக்கும் உள்ளவர். சொல்தவற மாட்டாதவர்.

**லாரேன்ஸ்** : (பாளையத் தலைவரை கை குலுக்கி) தங்கள் நட்பை மிகவும் பாராட்டுகிறோம்.

**பாளையத்தலைவன்** : (வணக்கத்துடன்) தங்களுக்கு உதவிசெய்ய என்றும் காத்திருக்கிறேன்.

**கிளைவ்** : எங்களுக்கு ஓர் சிறு உதவி தாங்கள் செய்ய வேண்டும். பிரெஞ்சுப் படைகளிலிருந்து குதிரைகளைக்கவன்று எங்களுக்கு விற்றால் நல்ல விலைகொடுத்து வாங்கிக்கொள்வோம். எங்கள் நன்றியறிதலாக இதை அங்கீகரித்துக் கொள்ளவும். (துபாஷ்க்குப் பணமுடிப்பு அளித்தல்)

**பாளையக்காரர்** : (மனதுக்குள் தூண்டியில் இரையில்லாமலே மீன் கிடைக்கிறதே) (வெளியில்) பணம்பெற்றுக் கொள்கிறார்.

**பாளையக்காரர்** : தங்களுக்கு எத்தனை குதிரைகள் வேண்டும் ?

**கிளைவ்** : எங்களுக்கு 100 குதிரைகள் பிடித்துக்கொடுக்க வேண்டும்.

**பாளையக்காரன்** : அவ்வளவுதானே. 100 குதிரைகள் நான் கொடுக்க வேண்டியது. அதுதான் என் கடமை என நினைக்கிறேன்.

**கிளைவ்** : அதுவே தான்.

**பாளையக்காரன்** : (வணக்கத்துடன்) என் கடமையில் தவறமாட்டேன். (விடைபெற்றுச் செல்லல்)

தனி அறை காலை.

**லாரேன்ஸ்** : (உலாவிக்கொண்டே) இன்றோடு ஒரு மாதம் ஆகிறது எத்தனை குதிரைகள் பாளையத்தலைவன் நமக்கு விற்றிருக்கிறான்.

**கிளைவ்** : (புத்தகம் திறந்து) 95 குதிரைகள் வரப்பெற்றோம். இன்னும் 5 குதிரைகள் பாக்கி. அதுவும் இன்று கெடுவு.

**லாரேன்ஸ்** : இப்பொழுது நம்மிடம் மொத்தக் குதிரைகள் எவ்வளவு ?

**கிளைவ் :** 245 ஆகும்.

**லாரேன்ஸ் :** முதலில் இருந்ததைச் சேர்த்தால் 295 குதிரைகள் இருக்கவேண்டுமே. 50 குதிரைகள் என்ன ஆயின.

**சேவகன் :** (வந்து வணங்கி கடிதம் ஒன்றுகொடுத்து) துரையே பாளையத்தலைவன் ஐந்துகுதிரைகளும் இக் கடிதமும் தங்களிடம் சேர்ப்பிக்கச் சொன்னான். அவசர காரியமாகச் செல்வதால் என்னிடம் கொடுத்தனுப்பினர்.

**கிளைவ் :** துபாஷை வரச்சொல்

(சேவகன் செல்லல்)

(இருவரும் கடிதத்தை திருப்பி திருப்பிப் பார்த்தல்)

**துபாஷ் :** (வந்து வணங்கி) என்ன செய்யவேண்டும்.

**கிளைவ் :** (கடிதம் கொடுத்து) இதை வாசியும்.

**துபாஷ் :** (கடிதத்தை பிரித்து வாசித்தல்)

"எனதன்புள்ள மேஜர்துரை அவர்களுக்கும் காப்டன் துரை அவர்களுக்கும் எனது வணக்கம் உரித்தாகுக.

இன்று அனுப்பிய ஐந்து குதிரைகளுடன் கணக்கு முடிவாகிறது. என் வாக்கும் நிறைவேறுகிறது.

தங்கள் லாயத்தில் குதிரைகள் குறைவதைக்கண்டு எனக்கும் வருத்தம் ஏற்படுகிறது. என்ன செய்வேன்! தங்கள் விரோதிகளுக்கும் இதேவித உதவி செய்வதாக முதலிலேயே வாக்களித்து விட்டேன். உங்கள் வேண்டுகோளையும் மறுக்க முடியவில்லை. இருதிறத்தார்க்கும் ஒரேவித காரியத்தில் உதவும் படி அருள்செய்த காலத்தின் லீலையை வியந்து நிற்கும் தங்கள் அன்பன்—பாளையக்காரன்—".

கிளைவும் லாரென்ஸ‍ும் ஒருவரை யொருவர் பார்த்தல்.

(திரை விழுகிறது.)

---

## விடுகதை விடைகள்

(கொத்து 33, மலர் 1, பக்கம் 8.)

**விடைகள் :**—(1) பால் கறக்கும் சொம்பு. (2) வளையல் காரன். (3) தேங்காய். (4) நெருப்பு. (5) பாதை அல்லது ரஸ்தா (Road)

ஷ விடைகள் அளித்தவர்கள் :—(1) C. Jeyamari. (2) K. S. Antonisamy. (3) R. S. Vellayappan. (4) S. Arputhasamy.

---

## நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

4–7–42. **சொற்பொழிவு:** முதியோர் கல்வி பிரசார சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ கோபாலன் B.A. அவர்கள், நம் ஆசிரிய மாணவர்க்கென, முதியோர் கல்வியைப்பற்றி இன்று மாலை சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினர்.

25–7–42. **ஆசிரியர் சங்கம்:** சங். தலைமை ஆசிரியரவர்கள் அக்கிராசனம் வகித்து, பால போதனமுறையின் விசேஷ தத்துவங்களை விளக்கிக்காட்டி, அவற்றையனுசரித்தொழுக வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர்.

27–7–42 to 29–7–42. **பாடசாலை வருடாந்திர சோதனை:** (The School Inspection) இம்மூன்று தினங்களில் நமது ஜில்லா கல்வி அதிகாரி அவர்கள் (D. E. O.) நம் பாடசாலையைப் பார்வையிட்டனர்.

கடைசி தினம் 29–7–42 புதன்கிழமை மாலை, நம் பாடசாலை "ஆசிரிய மாணவர் சங்கம்" கூடிற்று. அவ்வமயம் அக்கிராசனம் வகித்துப் பேசும்படி D. E. O. அவர்களை நம் பாடசாலைத் தலைமை ஆசிரியர் கேட்டுக்கொண்டனர். அவ்வண்ணம் அன்னவர் பரிவுடன் ஏற்றுக்கொண்டு, இப்பாடசாலையின்மட்டில் தமக்குள்ள அபிமானத்தையும் மதிப்பையும் பற்றி முதலில் கூறிப் பின்னர், ஆசிரிய மாணவர்களின் எதிர்கால வேலையைப்பற்றி அவர்கட்குச் சில அரிய புத்திமதிகளை எடுத்துரைத்தனர். அதன் சாராம்சமாவது:—

ஊக்கமும் உற்சாகமும் உருவெடுத்தாற்போன்ற இப்பாடசாலை சங். தலைமை ஆசிரியரின் பார்வையில் போதனமுறை பயின்று வருகின்ற மாணவர்கள், அப்பயிற்சி காலம் முடிந்த பின் இளைஞர்க்குக் கல்வி புகட்டுகையில் ஊக்கத்தோடும் உற்சாகத்துடனும் வேலை செய்து வரவேண்டும்.

அவ்வாறு உழைத்துவரும் ஆசிரியரைக் காண்போர், இவர் பயின்ற போதனமுறைப் பாடசாலையின் பெருமைதான் என்னே, என வியக்கும்படியாக விருத்தல் வேண்டும்.

ஆரம்பப் பாடசாலைகளில் வெகு காலமாக இருந்துவந்த இடுக்கண்களையும், ஊழல்களையும் அறவே ஒழியும்படி செய்து, அநேக சீர்திருத்தங்களைப் புரிந்துவருகின்ற நம் மாகாணக் **கல்வி டைரெக்டர்** அவர்களது அயராத உழைப்புகளை நாம்

பாராட்டவேண்டும். விசேஷமாய்ப் பெண் கல்வி மட்டில் அன்னவர் து லக்ஷியங்களை நாம் கடைப்பிடித்து ஒழுகவேண்டும். பிற்கால வாழ்க்கைக்கு மாணவர்களைப் பயிற்றும் தொண்டில் ஈடுபட்டுழைக்கும் ஆரம்ப ஆசிரியர்கள் தங்கள் தொழிலின் மகிமையை யுணர்ந்து, உழைத்து வருதலே சிறந்த சமூக சேவையும், தேச சேவையுமாகும்.

31–7–42. இன்று நம் பாடசாலைத் தலைமை ஆசிரியரவர்களின் முன்னிலையில், இப்பாடசாலை ஆசிரியர்களும், ஆசிரிய மாணவர்களும், கல்வி இலாகா டைரெக்டர் சுற்றறிக்கையின்படி, தேசிய முன்னணிப் பிரதிக்ஞை" (National war front) எடுத்துக்கொண்டனர். சங். தலைமை ஆசிரியரவர்கள், தொடக்கத்தில் ஷெ ப்ரதிக்ஞையின் கருத்தை விளக்கினர். அதாவது இந்த யுத்த காலம் நெருக்கடியாயுள்ள இச்சந்தர்ப்பத்தில் யாம் அனைவரும் ஒருமனப்பட்டு, தோல்வி மனப்பான்மையையும், பீதியை உண்டாக்கத்தக்க ஆதாரமற்ற வதந்திகளையும் நாம் எதிர்த்துத் தவிர்க்கவேண்டுமென்று வற்புறுத்தினர். அபாயம் நேரிட்டால் நமது பெண்டிர் பிள்ளைகள் அயலார் முதலியவர்கட்கு ஆசிரியர்களாகிய நாம் நம்மாலான உதவி புரிவதே ஷெ ப்ரதிக்ஞையின் முக்கிய கருத்தென்றும் எடுத்துக்காட்டினர். ஆசிரியர்களும் ஆசிரிய மாணவர்களும் ஷெ மொழிகளை ஏகோபித்து ஏற்றுக் கொண்டனர்.

---

## யோசனைக் கணக்கு

(A. Arokiam)

100 தேங்காய்களை விற்பதற்காக வாங்கி, அவற்றை இரு சம மூட்டைகளாகக் கட்டிக்கொண்டு, 1 கேட்டுக்கு (Gate) 1 மூட்டைக்கு 1 தேங்காய் வீதம் கொடுத்து 50 கேட்டுகளைத் தாண்டி, தேங்காய் ஒன்று ஒரு அணுவாக விற்று, அதில் $\frac{3}{16}$ ரூ.-ஐ கூலியாகக் கொடுத்துவிடுகிறான். $\frac{3}{8}$ ரூ.-ஐ செலவு செய்துவிடுகிறான். அப்படியானால் அவன் எத்தனை ரூ. மீதி வைத்திருப்பான்?

---

# பாலர் ஸங்கீதம்

(A. Gnanadickam, *South India Music School*, Ootacamund.)

## Moral Instruction

### உத்தம மாணவர்

4—5-ம் வகுப்புகள் :

இராகம் : செஞ்சுருட்டி, 28] (இசைந்த சூலம்) [ஆதி

### கண்ணிகள்

1. காலந்தப்பா நிதம்நிதம் பள்ளி செல்வோரை
ஞாலப் பெரியார் நற்சிறுவரென சொல்வாரே!
2. குருவைக் கண்டால் வந்தன வணக்கம் செய்வாரே
ஒருவருக்கும் சங்கடம் பண்ணு திருப்பாரே
3. படிக்கும்பாடம் மனதினில் அமைத்துக் கொள்வாரே
மடித்துஎட்டை, ஆசான்முன்பாடம் விள்வாரே
4. தலை இடை கடை எனவகை மூன்று விதமாக
கலை சிறுவர் எனபலர் சொல்வர் ஹிதமாக
5. உத்தமர் தலைமாணவர் அவர்பசுக் கொப்பாமே
சித்தம்பற்றின விஷயங்கள் நினைப்பர் தப்பாமல்
6. உழுதுபாடு படபயன்தரும் நன்நிலம் போலும்
பழுதிலாகுரு தரும்அளவே பலன் இடையோர்கள்
7. இல்லிக்குடநீர் முழுவதும்நில்லா விடுதல்போல்
சொல்லும் விஷயம் உளங்கொளா விடுவர் கடை
யோர்கள்
8. தகுதியாம்தலை மாணவராய்வர—முயல்வீரே!
மிகுதிப்பாடம் பயின்றுவிருத்தி அடைவீரே!

| | | |
|---|---|---|
| க மா ப ப ப பா ப ப ப ப பா ப ம | ம ப தநி த ப ம க | ரி க ரி ;; |
| காலம் தப்பா நிதம்நிதம் பள்ளி | செ..ல் வோ... | .. ரை |
| ரி பா ப ம ம மா ம க ஜு க க ரி ஸ நி | ஸ ரி க ம க ரி ஸ நி | ஸா ; ;; |
| ஞா.லப் பெரியார் ந.ற்சிறுவரென | சொல்வா. .... | ரே ; ;; |

நாடு ஆவணக் காப்பகம்
182299
சென்னை 600 008

## எலிமெண்டரி பாடசாலைகளுக்கு ஏற்ற
## சங்கீத பாட புத்தகங்கள்

1. பால சங்கீத வாசகம் முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு 0—4—6
2. பால சங்கீத வாசகம் ஆசிரியர்களுக்கு ... 0—6—6
3. கர்னாடக சங்கீத போதினி (முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு 0—6—0
4. கர்னாடக சங்கீத போதினி (2-ம் பாகம்)
   1 முதல் 5 வகுப்பு கிறிஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0
5. கர்னாடக சங்கீத போதினி (3-ம் பாகம்)
   6 முதல் 8 வகுப்பு கிறிஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0
6. கர்னாடக சங்கீத போதினி (4-ம் பாகம்)
   ஆசிரியர்களுக்கும், ஆசிரிய மாணவர்களுக்கும் ... 0—8—0

விலாசம்: **A. GNANADICKAM,**
*South Indian Music School, St. Thomas Church Rd.*
*OOTACAMUND.*

---

# OUR EMPLOYMENT BUREAU

## FOR

| MANAGERS OF SCHOOLS IN NEED OF TRAINED TEACHERS. | TRAINED TEACHERS IN NEED OF EMPLOYMENT. |
|---|---|

Managers and Teachers wishing to be benefited by Our Employment Bureau are requested to publish their requirements at a special concession rate in our "Poongothu", the most popular Tamil educational monthly among the teaching profession.

Reg. No. M. 1534.

# போதனு விஷயப் பூங்கொத்து காரியாலயம்

பழைய சஞ்சிகைகள்: பூங்கொத்து வருஷ இதழ்களை ஒன்ருகச் சேர்த்து உபாத்திமார்களுக்கும், பாடசாலைகளுக்கும் எப்பொழுதும் உதவும் வண்ணம் புத்தகமாக பைண்டிங் செய்து அநேகர் வைத்துக் கொள்ளுகிறுர்கள். அன்னவர்கள் பழைய தனி சஞ்சிகைகள் தேவையானபோது, பிரதி ஒன்றுக்கு தபால் கூலி உட்பட ரூ. 0-2-3 வீதம் அனுப்பவேண்டும்.

சந்தா நேயர்கள்: பூங்கொத்து காரியாலயத்திற்கு மணியார்டர் செய்யும் அன்பர்கள் தயவு செய்து தங்கள் பூழு விலாசத்தையும், சந்தா எண்ணையும் தெளிவாகக் கூபனில் எழுதினுல் நலமாக இருக்கும்.

விலாச மாறுதல்கள்: சந்தா நேயரில் சிலர் தங்கள் விலாச மாறுதலை முதலில் தெரிவியாமல் பத்திரிகை கிடைக்கவில்லை என்று எழுதுகிறுர்கள். விலாச மாறுதலை 10-ம் தேதிக்குள் தெரிவிப்பது நலம்.

பத்திராதிபர்

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.